[2001 மே 28

இப்பிரிவினரின் பிரச்சினைகளில் இவ்வரசு தனிக் கவனம் செலுத்தும். வேலைவாய்ப்புகளிலும், நாடாளுமன்றத்திலும், மாநிலச் சட்டமன்றப் பேரவைகளிலும் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு அளிப்பதற்கு வகை செய்யும் சட்டம் இயற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஊரகப் பகுதிகளில் நலிவுற்ற மகளிர் மேம்பாட்டிற்காக கடன் வசதிகளைப் பெறுவதற்கும், நிதி அதிகாரங்களைப் பெறுவதற்கும் வகை செய்யும் பொருட்டு, "மகளிர் மேம்பாட்டு மன்றங்கள்" ஏற்படுத்தப்படும். மகளிருக்கான சுய வேலைவாய்ப்புகளைப் பெருக்க ஐந்து இலட்சம் பெண்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் ஒரு பெருந்திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). பெண்களுக்கு பாதுகாப்பு உணர்வை ஊட்டும் வகையில், அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். வறிய குடும்பத்தினருக்கு, குறிப்பாக பெண்களுக்கு இன்னல் தரும் கள்ளச்சாராய வியாபாரத்தை இவ்வரசு கடுமையான நடவடிக்கைகளால் ஒடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

25. கடந்த ஐந்து ஆண்டுகளில், சத்துணவு மையங்கள் படிப்படியாக சீர்கேடடைந்துவிட்டன என்பது கண்கூடு. தகுதியானவர்களுக்கு, தரமான சத்துணவு கிடைக்கும் வகையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 1991-1996 ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட "தொட்டில் குழந்தை திட்டம்" மற்றும் ஏனைய குழந்தைகள் நலத் திட்டங்கள் மீண்டும் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) நமது முதியோர் கண்ணியமாகவும், வசதியாகவும் வாழும் வகையில், முதியோர் இல்லங்கள் ஏற்படுத்த அரசுசாரா அமைப்புகளுக்கு இந்த அரசு ஊக்கம் அளிக்கும். ஊனமுற்றோருக்கு பொது இடங்களில் சாய்வுதளங்கள், சிறப்புக் கழிப்பிடங்கள் போன்ற தனி வசதிகளுக்கு வகை செய்யும் சட்டங்கள் கண்டிப்பாகச் செயல்படுத்தப்படும்.

26. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய பெருமக்கள், ஏற்றத் தாழ்வற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்காக, ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகியோரின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதையே தங்கள் கொள்கையாகக் கொண்டு பாடுபட்டனர். மாண்புமிகு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள், தனது முந்தைய பதவிக் காலத்தில், சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவினருக்காக,